ஓம் குருவே போற்றி! ஓம் குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

**ஞாலகுருவின் படைப்புக்கள்**

# மீண்டும் ஒரு பாரதப் போர் - முன்னுரை



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி, ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்.**
**(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் கோயில் கொண்டருளுபவர்)**


மெய்யான இந்துமத ஆண்டு 43,73,121 ஐப்பசி மாதம்.

**இந்து இலக்கியக் கழக வெளியீடு**

காணிக்கை: ரூ 10/-

# உள்ளுறை

1. **“மீண்டும் ஒரு பாரதப் போர் - முன்னுரை”** - குருதேவர் அவர்கள் 18/10/1986இல் தலைமைப்பீடத்திலிருந்து அனைத்து அடியான்களுக்கும் எழுதிய கட்டுரையின் முன்னுரை.
2. **“அமைதியாக அ.வி.தி. பணி வளர்க்கும் விதம்”** - குருதேவர் அவர்கள் 12/10/1986இல் மதுரை சித்தரடியான் திரு M.C.இராமன் அவர்களுக்கு செயல்திட்டத்தை விவரித்து எழுதிய அஞ்சல்.
3. **“வ.ஆ.மாவட்ட அருட்பயணம்”** - 12/10/1986இல் குருதேவர் அவர்கள் வேலூரில் இருந்த சித்தரடியான் திரு சுப்பையா அவர்களுக்கு விடுத்த பயணத் திட்ட விளக்க அஞ்சல். இதிலேயே சந்திர கிரகணப் பூசையை எப்படிச் செய்வது என்பதற்கான குறிப்பும் உள்ளது.
4. **“நாள்கோள்மீன் பாதிப்பைத் தடுக்க முடியுமா?”** - குருதேவரின் ஆணை பெற்று 24/10/1986இல் தலைமைப்பீடத்து சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்கள் இராசிபுரத்து சித்தரடியான் திரு இர.கங்காதரக்குமார் அவர்களின் ஐயங்களுக்கு விடுத்த பதில் அஞ்சல்.
5. **“அனாதிசங்கராச்சாரியார் பீடநிலை ஓர் அறிவிப்பு”** - நவம்பர் 1986இல் குருதேவர் அவர்கள் தலைமைப்பீடத்திலிருந்து மதுரை சித்தரடியான் திரு M.C.இராமன் அவர்களுக்கு விடுத்த சுற்றுப்பயணத் திட்ட விளக்க அஞ்சல்.
6. **“குருதேவரே ஆயுதமேந்திப் போரில் ஈடுபடுதல்”** - குருதேவர் அவர்கள் 13/11/1986இல் அருளாட்சி அமைப்புப் பணிக்கான நேரடிப் போரில் தாமே ஆயுதமேந்தி ஈடுபடுதலைப் பற்றி அனைவருக்கும் அறிவித்த அஞ்சல்.

# மீண்டும் ஒரு பாரதப் போர் - முன்னுரை

1) அருட்பணி விரிவாக்கத் திட்ட செயல்வீரர்களே! இந்து மறுமலர்ச்சி இயக்க அங்கத்தினர்களே! குருதேவரின் பல்வேறு வகையான பத்திரிகைகளின் உறுப்பினர்களே! நமது நெறி ஆர்வலர்களே! நீங்கள் மட்டும் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தலைமைப்பீடத்தில் உள்ள தலைமைப் பணியாளர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடையவராய் இருந்து உருவாக்கப்பட்டதே இந்த **'மீண்டும் ஒரு பாரதப் போர்'** என்ற கட்டுரை. இதனைக் குருதேவர் வாயிலாகக் கேட்டு எழுதிய பெருமையும், உரிமையும் ஏறத்தாழ பத்துப் பன்னிரண்டு பேர்களுக்கு மேல் கிடைத்திருக்கிறது என்றால், எத்தகைய மிகப்பெரிய முயற்சி; விட்டுவிட்டு, தொடர்பு அறுந்து அறுந்து, மீண்டும் மீண்டும் முயற்சி எடுக்கப்பட்டுப் பல இடங்களில், பல சூழ்நிலைகளில், பல காலகட்டங்களில் அளப்பரிய ஆர்வத்தோடும், நம்பிக்கையோடும் அருகிலிருந்தவர்களின் முயற்சியால் இக்கட்டுரை உருவாக்கியிருக்கிறது என்பதனை நம்மவர்கள் தெரிந்தும் தெரியச் செய்தும், புரிந்தும் புரியவைத்தும், உணர்ந்தும் உணரவைத்தும் செயல்பட்டேயாக வேண்டும்.

**குறிப்பு**:- இக்கட்டுரையைப் பெறுகின்ற ஒவ்வொருவரும் கட்டாயமாக 2 அல்லது 3 முறை வேகமாகப் படித்தேயாக வேண்டும். அதற்குப் பிறகு அவரவர் திறமைக்கேற்ப 1 + 1

அல்லது 1 + 2 என்று குறைந்தது 4 அல்லது 6 நகல்களாவது எழுதியேயாக வேண்டும். இப்படி நகல் எழுதுவதன் மூலம் இந்தக் கட்டுரையின் செய்தியையும், கருத்துக்களேயும் உள்ளத்தில் ஆழமாகப் பதியவைத்துக் கொள்ள முடியும். அத்துடன் நமது குருதேவரின் திருத்தோற்றமும் (அவதாரமும்), தமிழின விடுதலேயும், பதினெண்சித்தர் பீடத்தின் வெற்றியும், உலக ஆன்மநேய ஒருமைப்பாடும், உலக மானுட இனத்தின் புனிதமும், விண்ணும் மண்ணும் இணேதலும், அருளாட்சி அமைத்தலும், ... பற்றிய விளக்கங்களேயே இந்த **மீண்டும் ஒரு பாரதப் போர்** என்ற கட்டுரை வழங்குவதால்; நம்மவர்கள் ஒவ்வொருவரும் இக்கட்டுரையை முழுமையாக மனதில் பதியும் வரை ஒரு சில மாதங்களேனும் அன்றாடம் ஒருமுறையாவது இதனேப் படித்திடல் வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இதேபோல், அவ்வப்போது நமது குருதேவர் கையெழுத்துப் பிறதிகளாக (The Manuscripts) அனுப்பக் கூடிய கட்டுரைகளே ஊன்றிப் பலமுறைப் படித்துப் புரிந்து தெளிவு பெருதவர்கள் முன்னணியினரிலேயே சிலர் எதிர்பாராமல் தோன்றி விட்டனர். அவர்களுக்கு நமது வளர்ச்சியும், கொள்கை வளமும், குறிக்கோள் வலிமையும், தத்துவப் பிடிப்பும், செயல்திட்ட நம்பிக்கையும் போதுமான அளவு (Sufficient conditions) இல்லாமற் போய்விட்டது. அதனுல் தேவையில்லாத காரணகாரியங்களேயும், சந்தர்ப்பங்களேயும் பின்னணியாகக் கொண்டு அவர்கள் விலகியும், விலக்கியும், ஒதுங்கியும், ஒதுக்கியும் தனிமைப்பட நேரிட்டு விட்டது. இனியாவது நம்மவர்கள் கையெழுத்துப் பிறதிகளேப் படிப்பதும், நகலெடுப்பதும், கோப்புகளில் தொகுத்துப் பாதுகாத்தும், பிறருக்குப் படிக்கத் தருவதும் தங்களது தலேயாய கடமை என்று உணர வேண்டும்.

2) இந்த **மீண்டும் ஒரு பாரதப் போர்** என்ற கட்டுரைக்குரிய நிகழ்ச்சி 18.10.86இல் நடந்தது. அதில் பங்கேற்றோர் 36 பேர்களுக்கும் மேலாவர். உடனே உடனே அந்நிகழ்ச்சி பற்றிச் சுற்றுப்பயணக் குறிப்பேட்டில் எழுதி வைக்கப்பட்டு கட்டுரையும் எழுத ஆரம்பிக்கப் பட்டது. ஆனால், குருதேவர் இந்த ஒரு நிகழ்ச்சியை மட்டும், இதில் பங்கு பெற்றிட்ட ஒரே ஒரு அநுபவத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு யாரும் இந்தக் கட்டுரையை எழுதிட முடியாது. ஏனென்றால், அருட்போர் நிகழ்த்த வேண்டிய அருளாட்சி நாயகம் 1992இல் அறிவிக்க வேண்டிய அருட்போரை ஆறு (6) ஆண்டுகளுக்கு முன்னரே, அதாவது 18.10.86இல் அறிவிக்க நேரிட்டிருக்கிறது என்றால், அது பற்றிய எண்ணற்ற செய்திகளும், கருத்துக்களும், அருளுலகப் பேருண்மைகளும் குவலய குருபீடத்தால், ஞானாச்சாரியாரால், இந்துமதத் தந்தையால், அருளாட்சி நாயகத்தால் மனந்திறந்து வாய்விட்டு கூறப்பட்டேயாக வேண்டும். எனவே, பொறுப்போடும், பொறுமையோடும் பொறுத்திருந்து எழுதுங்கள் என்று ஆணையிட்டார்.

அதன்படியே, அவர் விருப்பப்படியே கடந்த ஐந்து மாதங்களாகத் தொடர்ந்து முயன்று 1.4.1987இல் நிறைவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்குரிய முன்னுரையும், தலைமைப்பீடத்தில் இருக்கக்கூடிய நாங்கள் அனைவரும் சேர்ந்து கலந்து உருவாக்கி அதனையும் அவரிடம் படித்துக் காட்டி அவருடைய ஒப்புதல் பெற்றே நிறைவு செய்திருக்கிறோம். எனவே, இந்த முன்னுரையும் இந்தக் கட்டுரையோடு மிகவும் நெருக்கமான தொடர்புடைய ஒன்றாகும்.

3) நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் நாம் வளருகின்றோமா? இல்லையா? என்று அடிக்கடி சந்தேகப் படுகின்றவர்களாகவும், சஞ்சலப் படுகிறவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் இந்த ஊசலாட்டக்காரர்கள் செய்யக்கூடிய சுற்றுப்பயணங்களில் எல்லாம்

ஆங்காங்கே பல நூற்றுக்கணக்கான மக்கள் நமது நிகழ்ச்சிகளில் கூடிடக் காண்கிறோம். நமது சுடுகாட்டுப் பூசைகளிலும், அ.வி.தி. நிலையங்களிலும், பருவ பூசைகளிலும் பங்குபெற்று நலமடைந்த நோயாளிகளையும், பேயாளிகளையும் ஏறத்தாழ தமிழகமெங்கும் காண முடியும் என்றதோர் அரிய நிலையும் உருவாகியது.

இவற்றிற்கெல்லாம் மேலாக நாம் நம்மிடம் உள்ள செய்திகளை, கருத்துக்களை, தத்துவங்களை, கொள்கைகளை, குறிக்கோள்களை, செயல்திட்டங்களை மிகமிகத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும், வகைவகையாகவும், வரிசைவரிசையாகவும், பகுத்துப் பகுத்து, வகுத்து வகுத்து, ... எண்ணற்ற சிறிய பெரிய தலைப்புகளில் தனிக் கட்டுரையாகவும், தொடர் கட்டுரைகளாகவும் எழுதி, அவற்றை நமது இயக்கத்தாருக்கு மட்டுமே உரிய மாதவெளியீடாக ஒன்றைத் துவக்கி (குருதேவர் அறிக்கை) அச்சிட்டு ரூ.1/- விலையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக வழங்கி வருகிறோம்.

**(நமக்கு ரூ.2/- அடக்க விலையாகியும், அஞ்சல் செலவு இதற்குமேல் அதிகமாகியும், மாதந்தோறும் பல நூற்றுக்கணக்கான பிறதிகள் விற்காமலிருந்தும், இனமாக நூற்றுக்கும் மேற்பட்ட அறிக்கை அன்பளிப்பாக கொடுக்கப்பட்டும், நமக்குப் பெருமளவில் பொருளிழப்புடன் சிக்கலும், தொல்லையும் வந்திட்ட போதும் தொடர்ந்து அச்சிட்டுக் கொண்டிருக்கிறோம் என்பது குறிப்பிடத் தக்கது. மேலும், இந்த குருதேவர் அறிக்கை அச்சிடுவதற்காக நமக்கு மாதாமாதம் நிலையான பொருளாதார உதவி தேவையென்று அறிவிக்கப்பட்ட போதும், வேண்டுகோள்கள் விடுக்கப்பட்ட போதும் கூட இன்னும் போதுமான அளவு உதவி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது**.)

இது ஒன்றே போதும் நம்மிடம் உள்ள கொள்கை, குறிக்கோள், தத்துவம், சித்தாந்தம், செயல்திட்டம் அனைத்தும் நெடிய பெரிய பண்பாட்டுப் பாரம்பரியத்தையும், வரலாற்று அடிப்படையையும், இலக்கியச் சான்றுகளையும், செயலுக்குரிய நடைமுறை ஊன்றுகளையும் பெற்றிருக்கின்றது என்ற பேருண்மை இந்த 36 குருதேவர் அறிக்கைகளில் நிலைநாட்டப் பட்டுவிட்டன.

அதாவது, நாம் பயனற்ற அல்லது தொடர்பற்ற அல்லது நெறிமுறையற்ற அல்லது எழுதிக் காட்டக்கூடிய வடிவமைப்பற்ற பழமை வாதங்களையும், மூடநம்பிக்கைகளையும் பேசித் திரிகிறோம் என்ற குற்றச்சாட்டு புற இனத்தாரிடமிருந்தும், அக இனத்தாரிடமிருந்தும் இனிமேல் எழவே முடியாத அளவிற்கு ஒரு ரூபாய் விலையில் 36 புத்தகங்களையும், 5 பைசா, 10 பைசா, 25 பைசா, 50 பைசா, 75 பைசா, ரூ.1/-, ரூ. 2/-, ரூ.5/-, ரூ.6/- ரூ.7/-, ரூ.10/- ரூ.15/- ... என்ற விலையில் தொடர்ந்து பல புத்தகங்களையும் வெளியிட்டு நமது இயக்கத்துக்கெனத் தனித்த, இனிய, சுவைமிக்க இலக்கியங்களை உருவாக்கி விட்டோம். இந்த இலக்கியங்கள் சித்தர்நெறியை, சீவநெறியை, இம்மண்ணுலகின் **மெய்யான இந்துமத**த்தை, அண்டபேரண்டமாளும் இந்துமதத்தை உலகுக்கு விளக்கிடும்! விளக்கிடும்! விளக்கிடும்! அதன்மூலம் நமக்குத் தேவையான எல்லாவகையான துணைகளும், துணையாளர்களும் கிடைத்திடுவார்கள்.

இப்படிப்பட்ட நமது வளர்ந்த நிலையில்தான் நமக்கு வளர்ச்சி இருக்கிறதா? வலிமை இருக்கிறதா? என்று சந்தேகப்படுகின்றவர்களும், பிறரை சந்தேகிக்குமாறு செய்கிறவர்களும் நம்மிடையே தோன்றிவிட்டார்கள். அதாவது, நம்மவர்களிலேயே தீவிரவாதிகள் (இடதுசாரிகள்), முன்னணி வீரர்கள், ... என்று சொல்லிக்கொள்ளக்

கூடியவர்கள் தாங்களும் குழம்பிப் பிறரையும் குழப்பிட ஆரம்பித்து விட்டார்கள்.

அதற்குக் காரணம் **அவர்கள் தங்களைத் தத்துவவாதிகளாகவும், இயக்கக் கொள்கைகளையே உருவாக்குகிறவர்களாகவும், இயக்கத்தையே தாங்கள்தான் நடத்துவதாகவும், தங்களைப் போன்ற ஒருசிலர் இல்லாவிட்டால் இயக்கமே இருக்காது என்றும், இதுகாறும் இயக்கத்தில் செயல்பட்டு வந்திட்டவர்களும், இப்போது செயல்பட்டுக் கொண்டிருப்பவர்களும் சரியான முறையில் செயல்படவில்லை யென்றும், தங்களால் மிகவிரைவில் இயக்கத்தை விரிவாக வளர்த்திட முடியுமென்றாலும் அதற்குத் தலைவர் முதல் தொண்டர் வரை சரியாக ஒத்துழைப்பதில்லை என்றும்...** கற்பனாவாதத்தை வளர்த்துக் கொண்டுவிட்டார்கள். இதனால், இவர்கள் இதுவரை வெளிவந்துள்ள 36 குருதேவர் அறிக்கைகளையும் திரும்பித் திரும்பிப் படிக்க வேண்டும் என்ற கடமையுணர்ச்சியை மறந்து விட்டார்கள்.

அதாவது, ‘குருதேவர்’ அறிக்கைகளில் தங்களுக்குத் தெரியாதது எதுவுமில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இதேபோல், இதுவரை நாம் வெளியிட்டுள்ள சுமார் 170 அல்லது 200க்கும் மேற்பட்ட வகைவகையான அறிக்கைகளையும், அறிவிக்கைகளையும் கோப்புகளில் தொகுத்து வைத்து பாதுகாத்து அடிக்கடி திருப்பித் திருப்பிப் படித்துப் பார்த்து நமது வளர்ச்சி வரலாற்றினைப் பற்றிய தெளிவான, அறிவைப் பெற்றிடும் **குருவாணையை, குருவின் செயல்திட்டத்தை தேவையற்றது அல்லது பயனற்றது** என்று கருதவும், விமரிசிக்கவும் ஆரம்பித்து விட்டார்கள்.

இவற்றிற்கெல்லாம் மேலாக இவர்கள் தாள்கள் நைந்தும், எழுத்துக்கள் மங்கியும், கோப்புகள் பிய்ந்தும், மர அடுக்குப்பெட்டிகளில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்ற நூற்றுக்கணக்கான கோப்புகளில் உள்ள கட்டுரைகளை மீண்டும் நகலெடுத்துப் பாதுகாப்பதும்,

முடிந்தவரை படிப்படியாக எல்லாக் கோப்புகளையுமே அச்சிட்டு நூலாக்குவதும் ... என்ற செயல்திட்டங்களை யெல்லாம் **'பழையன கழிதலும் புதியன புகுதலும்தான் மரபு'** என்ற மூதுரையைக் கூறி கோப்புகளில் உள்ள பழைய கருத்துக்களை யெல்லாம் மீண்டும் நகலெடுப்பதோ, அச்சிடுவதோ பழமைவாதமாகும், மடமைவாதமாகும், மூடநம்பிக்கைக்கு உரியதாகும், தேவையற்ற செயலாகும் என்று மறைமுகமாகவும், நேரடியாகவும் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

அத்துடன் நகல் எடுப்பவர்களின் ஆர்வத்தைப் பாதிக்கும் வண்ணமும், நகலெடுப்பதற்காகக் கோப்புகளும், தாள்களும், நகலொற்றித் தாள்களும் (carbon papers) பெரிய அளவில் மாதாமாதம் வாங்கப்படுவதையும்; திருநெல்வேலி, மதுரை, காரியேந்தல்பட்டி, திருச்சி, முசிறி, தஞ்சாவூர், காரைக்குடி, கண்டனூர், கோவை, சிறுமுகை, வேலூர், சேலம், வேம்படிதாளம், இராசிபுரம் முதலிய பல ஊர்களுக்கும் நகல்கள் அனுப்பி பல நகல்கள் எழுதி அந்தந்த வட்டாரத்தவர்களின் கோப்புகளுக்கும், வெளிமாநிலத்தவர்களின் கோப்புகளுக்கும், வெளிநாடுகளில் உள்ளவர்களின் கோப்புகளுக்கும் அனுப்பி **'கையெழுத்து நகல் புரட்சி'யை (The Manuscript Revolution)** விரிந்தும் விரைந்தும் நிகழ்த்தும் செயல்திட்டத்தைப் பயனற்றதென்றும், அதிகமான அஞ்சல் செலவுக்குரிய ஒரு திட்டம் என்றும் எதிர்த்தும் விமரிசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

**இப்படியெல்லாம் இவர்கள் ஏறத்தாழ 2000 ஆண்டுக்காலமாக இயங்கி வரும் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் செயல்திட்டங்களையும், கொள்கைகளையும், குறிக்கோள்களையும் சிறுபிள்ளைத்தனமாகவும், பைத்தியக்காரத்தனமாகவும், கோழைத்தனமாகவும் விமரிசனம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.** இவர்களின் இந்தத் தவறான போக்குகளால் இயக்கத்தின் எல்லாநிலைகளிலும் பிற்போக்கு நிலைகளும், தவறான

பல எதிர்ப்பு நிலைகளும் முளைவிட ஆரம்பித்து விட்டன. எனவேதான், அப்படி முளைப்பவர்களை வேருடன் பறித்து களையெடுக்கும் பணியும், இவர்களுடைய செயல்நிலைகள் அனைத்திற்கும் தடைவிதித்து இவர்கள் திருந்துவதற்கு வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது.

4) இந்தக் கட்டுரையைப் படிப்பவர்களுக்கு 18.10.86இல் நிகழ்ந்த **'மீண்டும் ஒரு பாரதப் போர்'** என்ற அறிவிப்புக் கட்டுரையில் சிறுமுகையில் 8.2.1987இல் யக்ஞம் செய்து **நிறை யக்ஞர், கருவறை மூலவர்களின் அம்மையப்பர்** என்ற பட்டங்களைப் பெற்ற செய்தியும், அப்பட்டங்களைக் குறிக்கப்படும் நிலையும் எப்படி ஏற்பட்டது என்ற ஐயம் வரலாம். நமது குருதேவர் நமது இயக்கத்தில் ஊசலாட்டக்காரர்களும், கலகக்காரர்களும், குழப்பவாதிகளும், சந்தர்ப்பவாதிகளும், கட்டுப்பாட்டை விரும்பாத தான்தோன்றிகளும் குறிப்பிட்ட அளவு தோன்ற ஆரம்பித்து விட்டார்கள் என்பதை உணர்ந்து மிகவும் எச்சரிக்கையானர். அதனால்தான் 18.10.1986இல் பாரதப்போரில் ஆச்சாரிய பீடமான துரோணாச்சாரியாரே நேரில் வந்து கலியுகப் பாரதப் போரை அறிவித்தும் கூட அதுபற்றிய செய்திகளைக் கட்டுரையாக வெளியிடத் தயங்கி விட்டார் நமது குருதேவர்.

ஆனால், சற்றும் எதிர்பாராத வகையில் கோவை மாவட்ட சிறுமுகையில் உள்ள திருவள்ளுவர் நகரில் பழ.கோபால் இல்லத்தில் மருதமலை ஆண்டவர் அருட்கோட்டத்தில் யக்ஞம் செய்தபோது அண்டபேரண்டத்தவர்களின் ஒப்புதலோடும், துணையோடும் யக்ஞத்தைச் செய்து முடித்தார். அதனால் என்றும் உள்ள அருளுலகத்தார் அனைவரும் அருளுலகில் பெறற்கரிய **'நிறை யக்ஞர்'** என்ற அருட்பட்டத்தையும், **'கருவறை மூலவர்களின் அம்மையப்பர்'** என்ற அருட்பட்டத்தையும் குருதேவருக்கு வழங்கினர்கள். இவற்றை 1992இல்தான் பெறுவதற்குரிய திட்டத்தை வகுத்திருந்தார் நமது

குருதேவர். ஆனால், இவை சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்துள்ளதால் குருதேவர் தமது வலிமையையும், வல்லமையையும், வளமையையும் விண்ணுலக மூவகைக் கருவறை மூலவர்களையும் அழைத்து எடையிட்டுப் பார்த்துக் கொண்டார்.

அதற்குத் துணையாக விண்வெளியில் அருட்போர் புரிந்து வெற்றிப் பயணம் செய்து கொண்டிருக்கக் கூடிய குருதேவரின் தாத்தா தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களுக்கு 'யக்ஞம்' பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டது. அவருடைய வாழ்த்து கிடைத்தது. ஆயாள் தாய்லாந்து நாட்டு இளவரசி பொன்னிறப்பாவை மிகவும் மகிழ்ந்து சத்தி அண்டத்து இளவரசி தேவதேவி என்பவர்களை (ஆதி ஈசுவரி, அனாதி ஈசுவரி, ஆதி சத்தி, அனாதி சத்தி என்ற நான்கு அருட்பட்டங்களை பெற்றவர்கள்) உடனடியாக குருதேவருக்கு உதவியாக அனுப்பி வைத்தார்கள்.

அந்தத் தேவதேவி விரைந்து மண்ணுலகம் வந்து மண்ணுலகிலுள்ள மூவகைக் கருவறையினர்களையும் சந்தித்துக் குருதேவர் பற்றியும், அருளாட்சி பற்றியும் சிந்திக்கச் செய்திட்டார்கள். குருதேவருக்கும் தேவையான எல்லாவிதமான பரிந்துரைகளையும் வழங்கி விரைந்தும் விரிந்தும் சித்திபூசை பற்றியும், ஊசலாட்டக்காரர்கள் பற்றியும், பூசைமுறைகள் பற்றியும், குறிப்பிட்ட சில தனிமனிதர்கள் பற்றியும் தேவையான முடிவுகளை எடுத்துச் செயல்படுமாறு செய்தார்கள். அதன் அடிப்படையில்தான் குருதேவர் துணிந்து வடஆற்காடு மாவட்ட வேலூரில் அமைத்த திருகுலத்தில் 18.10.86இல் விண்ணுலகிலிருந்து வந்த துரோணாச்சாரியாரின் பெருமுயற்சியால் மீண்டும் ஒரு பாரதப் போர் அறிவிக்கப்பட்டது பற்றிய நிகழ்ச்சியின் தொடர்பான குறிப்பிட்ட செய்திகளையும், கருத்துக்களையும்

விளக்கியுரைத்து இந்த **'<u>மீண்டும் ஒரு பாரதப் போர்</u>'** என்ற தலைப்பில் தயாராகி வந்த கட்டுரை அஞ்சலை முழுமை செய்தார். எனவேதான் இக்கட்டுரையினைக் குருதேவர் நிறையக்ஞராகவும், கருவறை மூலவர்களின் அம்மையப்பராகவும் இருந்து எழுதச் செய்துள்ளார். இதனை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

5) இன்றைய நிலையில் தலைமைப் பீடத்தில் தலைமைப் பணியாளராக

i. அருதிசங்கராச்சாரியார் பீடம் இளந்துறவி சுந்தரானந்தா,

ii. பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் இரா.சீனிவாசன்,

iii. காரைக்குடிப் புதுப்பெரியவாள், ஆதிக்கொப்புடை நாயகியம்மன் சன்னிதானம் இரா.முத்துராசமூர்த்தி,

iv. இராகுகாலக் கொற்றவை சன்னிதானம் த.குருசாமி,

v. சமயபுரம் மாரியம்மன் சன்னிதானம் சீ.நாகானந்தன்,

ஆகிய ஐவர் தயாரித்த முன்னுரையும் கட்டுரையும் ஆகும்.

**//உண்மை நகல்//**

**<u>நகல் தயாரிப்பு</u>:-**

**சித்தரடியார் கோ.நடராசன்,**
**அருள்மிகு மருதமலை முருகன் சன்னிதானம்,**
**10/116 நீலிபாளையம் பாதை, எலகம்பாளையம்,**
**சிறுமுகை 641302, கோவை மாவட்டம்.**

**<u>உதவி:</u>**

**சித்தர் மகள் N.சுசீலா நடராசன்,**
**அருள்மிகு காஞ்சி காமாட்சியம்மன் சன்னிதானம்,**
**நாள்: 07.07.87, செவ்வாய்க்கிழமை.**
**நேரம்: பிற்பகல் 3.00 மணி.**

**//இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

<u>தொகுப்பாளர் தரும் குறிப்பு</u>: *இந்தக் கட்டுரை 'மீண்டும் ஒரு பாரதப் போர்' என்ற நெடிய கட்டுரையின் முன்னுரை மட்டுமே. கட்டுரை பின்னர் வெளிவரும்.*

# அமைதியாக அ.வி.தி. பணி வளர்க்கும் விதம்

அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் M.C.இராமன் அவர்கள் சமூகத்திற்கு தலைவர் குருதேவர் ஞாலகுரு சித்தர் கருவூரூர் விடுக்கும் செயல் ஊக்கத் திருவோலை.

1 அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே, அம்மையப்பன் அருளே.

2) தங்களுடைய 11.10.86ஆம் நாளைய அஞ்சல் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி. நன்றி. தாங்கள் அடைகின்ற வெற்றிகள் அனைத்திற்கும் வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கப்படுகின்றது.

3) எந்த ஊருக்குச் சென்றாலும் பொது இடங்களில் அரசியல் கட்சிகள் தங்களுடைய கொடிகளை ஏற்றியிருக்கின்ற இடத்திலே நமது மெய்ஞ்ஞானக் கொடியை ஏற்றுங்கள். கடுமையான செய்வினைப் பாதிப்போ, வேறு மந்திரவாதிப் பாதிப்புக்களோ உள்ளவர்களுக்குப் பரிகாரம் செய்யும் பொழுது பெரிய சாலை (Highways) இரு பக்கங்களிலும் உள்ள ஏதேனும் ஒரு மரத்தின் உச்சியில் பச்சை மூங்கிலைக் கட்டி அதில் மெய்ஞ்ஞானக் கொடியைப் பறக்க விட்டு அந்தக் கம்பத்தின் அடியில் அந்த வீட்டு மண், காட்டு மண், தொழிலிடத்து மண் மஞ்சள் துணியில் வைத்து முடிச்சாகக் கட்டிவிட்டால் விண்வெளியாகச் செல்லுகின்ற அனைத்து அருளாளர்களும் பாதுகாப்பை வழங்குவார்கள்.

4) ஏழை எளிய பாட்டாளிப் பாமர மக்களுக்கு உதவி செய்வதற்காகத்தான் நமது இயக்கம் இருக்கிறது. நூற்றுக்கணக்கில்

பணம் செலவு செய்து எல்லோரையும் பரிகாரம் செய்து கொள்ளக் கூற முடியாது. நம்மிடம் அருட்பட்டம் பெற்றவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களிடம் கொடிமரத்திற்குரிய ரூ.15, 25 மதிப்புள்ள தகடுகளை 10, 20 எனக் கொடுத்து வையுங்கள். எந்தப் பாதிப்பாக இருந்தாலும் அந்த வீட்டிலோ, காட்டிலோ, தொழில் நிலையத்திலோ இந்தத் தகட்டைப் புதைத்து கொடிமரத்தை நட்டு, கொடியேற்றிக் குருதேவருக்குத் தெரிவித்தால் பாதுகாப்பு வழங்கப்படும்.

5) பலர் தங்களுடைய வேண்டுதலுக்காக நெடுந்தொலைவில் உள்ள கோயில்களுக்குக் கடன் வாங்கிக் கொண்டு சென்று காணிக்கை செலுத்துகிறார்கள். இதனால், நமது மதத்திற்குச் செல்வாக்கு குறைந்திருக்கிறது. கெட்ட பெயர் ஏற்பட்டிருக்கிறது. இவர்களெல்லாம் மாதாமாதம் ரூபாய் மூன்று காணிக்கை செலுத்தி பருவபூசை உறுப்பினர் என்று அ.வி.தி. உறுப்பினர் அட்டையில் பதிவு செய்து அந்தந்த வட்டாரத்தில் அ.வி.தி. கிளை அலுவலகம் என்று உருவாக்கிக் கொண்டிடல் வேண்டும். ஆங்காங்கே அமைப்பாளர்களை உருவாக்கி மாதாமாதம் வசூலாகும் தொகையில் ரூ.1/- அந்தந்த ஊரில் பருவ பூசை செய்வதற்காகவும்; ரூ.1/- குருகுலத்தில் வீ.மா.ச. பருவ பூசை செய்வதற்காகவும்; மீதி ரூ.1/- கருகுலத்தில் குருதேவர் பூசை செய்வதற்காகவும் என்று பிரித்து விட வேண்டும். அந்தந்த மாதப் பருவ பூசையில் யார்யாருக்காக அருள் வழங்க வேண்டுமென்பதை அவர் பெயர், வயது, பிறந்த நட்சத்திரம் எழுதினால் போதும். இந்தப் பட்டியல் மாதாமாதம் அனுப்பப்படல் வேண்டும். இவர்களுக்குக் கட்டாயமாக யாகச் சாம்பல் குருகுலத்திலிருந்து அனுப்பப்படும். தேவையானவர்களுக்கு மட்டுமே கருகுலத்திலிருந்து அனுப்பப்படும்.

6) ஆசுடின்பட்டி, குலசேகரநல்லூர், சிவகாசி, மதுரை நண்பர்களின் அருட்பட்டங்களோடு கூடிய முழுமையான பட்டியல் தேவை. வாராவாரம் ஞாயிறு அல்லது வெள்ளி கட்டாயமாகச் சிலராவது

சன்னிதான உடையில் சென்றேயாக வேண்டும். மதுரை மாநகருக்குள் ஒரு புதிய இடத்தில் கூட கொடியேற்றப்பட வில்லை. ஒரு புதிய உறுப்பினர் கூட இன்னும் சேர்க்கப்பட வில்லை. இரண்டு மாதத்துக்கு ஒருமுறை கூடக் குருதேவரை மதுரைக்கு வரவழைக்க முடியாத நிலையிலேயே மதுரை மாநகர வளர்ச்சி இருக்கிறது என்பதை எண்ணி வருந்துகிறோம். இந்த அஞ்சலை பெரி. முத்தையாவிடமும் படித்துக் காட்டுங்கள். சில நூறு செலவழித்துப் பொதுகூட்டங்கள் போட முடியாவிட்டாலும்; யாம் தங்கும் நாட்களில் அன்றாடம் மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் பூசைகள் செய்து ஆலயத்துக்குள் ஞான உலா வந்தால் போதும். இந்தச் செயல்திட்டம் வெற்றிபெற செகதீசன் வீட்டிலோ, தங்கள் வீட்டிலோ அதிகக் கூட்டமில்லாமல் எளிமையாகத் தங்கி அமைதியாக அ.வி.தி. பணி வளர்த்தால் போதும். பிறம்மயோகி M.S.R. அவர்களிடம் இந்தச் செயல்திட்டத்தை விளக்கிக் கூறுங்கள்.

உடன் பதில்.

**அன்பு**

**ஞாலகுரு சித்தர் கருவூரர்,**

**12/10/86.**

<u>**நகல் நல்குபவர்**</u>**:-**

அருள்மிகு வேம்படிதாளம் சுடலைக்காரி சன்னிதானம், சித்தரடியான் இரா.வெங்கடேசன் B.Sc., (M.A.), வேம்படிதாளம், சேலம் (Dt.).

**//உண்மை நகல்//**

**// இதன் மூல நகல்: சித்தரடியான் திரு இரா.வெங்கடேசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது. //**

சென்னை-11,
12.10.1986.

# வ.ஆ. மாவட்ட அருட்பயணம்

அருள்மிகு திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானம் பெ.சுப்பையா B.E. அவர்களுக்கும்; தொடைதட்டி அருணசல சாமி மடத்து பதினெண்சித்தர் அறக்கட்டளைக் குழுவிற்கும்;

தலைவர், குருதேவர், ஞாஞச்சாரியார், அருளாட்சி நாயகம், இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார், குவலய குருபீடம் தமது அருட்பயணம் குறித்து விடுக்கும் திருவோலை:-

1) வேலூர் மாவட்டப் பொறுப்பாளர்களுக்கும், அருள்மிகு சித்தரடியார்கள் தேவராசலு, இராசாபாதர், ஓவிய ஆசிரியர், தலைமை ஆசிரியர், செயராமன், இராமலிங்கம், பிச்சுமணி, ... முதலிய இன்னோரன்ன அனைவரும் அவரவர்க்கு என்னென்ன அருட்பட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று முழுமையாக தெளிவான விவரங்களோடு வீட்டு முகவரிகளையும் எழுதி இந்த அஞ்சல் கண்டவுடன் தந்தி போல் நினைத்து தலைமைப் பீடத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். சந்திர கிரகணம் வருவதால் (17/10/86) அனைவருக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டும்; எச்சரிக்கை அறிவிப்பு!

2) சந்திர கிரகணம் பற்றிய பூசை விவரங்களையும்; வ.ஆ. மாவட்டம் முழுவதும் விரிந்தும் விரைந்தும் புத்துயிர்ப்புப் பணிகளையும், அ.வி.தி. நிலையங்களையும் நிகழ்த்துவது பற்றிய விவரங்களையும்

நேரில் உடனிருந்து செய்முறைப் பயிற்சியாக விளக்குவதற்காக அருட்சேனையின் இணைத் தளபதி அருள்மிகு சிவகங்கை வெட்டுடையார் காளி சன்னிதானம், சித்தரடியான் இரா.சண்முகானந்தன் B.E.யும், வடபுலத்துக் கொள்கைபரப்புச் செயலாளர் சீ.மோகன் B.E. அருள்மிகு பசிய இளந்தலைகளை அணிந்த கபாலீசுவரி சன்னிதானம் அவர்களும், தஞ்சை மாவட்ட இணைத்தலைவர் அருள்மிகு தஞ்சைப் பெருவுடையார் சன்னிதானம் சோ.இரவீந்திரன் அவர்களும்; 14/10/86 செவ்வாய்க்கிழமை வேலூருக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள். இவர்கள் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அருளாணையையும், அருளாட்சிநாயகத்தின் குருவாணையையும் பெற்று வருகிறார்கள். எனவே, இவர்கள் பாலாற்றங்கரைத் தொடர்பாக உள்ள அனைத்துப் பகுதி அருளுலகத்தார்களையும் அழைத்துப் பூசை செய்யும் அதிகாரத்தைப் பெற்று வருகிறார்கள்.

எனவே, வேலூருக்குள் பொது இடங்களில் சமுதாய அரசியல் கட்சிகளின் கொடிகள் பறக்கின்ற இடங்களில் நமது இ.ம.இ.யின் மெய்ஞ்ஞானக் கொடியை ஏற்ற முற்படுங்கள். ஒருசில தனிமனிதர்களின் வீடுகளிலாவது பரவலாக மெய்ஞ்ஞானக் கொடி ஏற்றப் பாருங்கள். வ.ஆ. மாவட்டத்திற்குள் ஒருசில ஊர்களிலாவது இ.ம.இ.யின் நீண்ட சதுர மெய்ஞ்ஞானக் கொடியையாவது; அல்லது அ.வி.தி.யின் முக்கோணச் சிவலிங்கக் கொடியையாவது ஏற்றிட முற்படுங்கள். முடிந்தால், குருதேவரின் வருகையின் போது ஒருசில இடங்களிலாவது மெய்ஞ்ஞானக் கொடி ஏற்ற முயற்சி செய்யுங்கள்.

**குறிப்பு**:- நமது அறக்கட்டளைக் குழுவினரின் இல்லங்களிலும், நமது ஆதரவாளர்களின் இல்லங்களிலும், நமது அருள்வேண்டுபவர்களின் இல்லங்களிலும் கட்டாயமாகக் கொடியேற்றப்படல் வேண்டும்! என்ற ஓர் உறுதியில் செயலாற்ற முற்படுங்கள்.

3) 16/10/86 வியாழக்கிழமை இரவு ஏற்காடு விரைவு வண்டியில் அடியார்களோடு குருதேவர் புறப்பட்டு வருகின்றார் என்ற செய்தி இதன் மூலம் அறிவிக்கப்படுகின்றது. உயர்நிலைப்பள்ளி மாணக்கர்கள் மட்டுமின்றி பொதுமக்களும் பெருவாரியாகக் கலந்து கொள்ளுமாறு போதிய விளம்பரங்களைச் செய்யுங்கள். நாம் மட்டும்தான் உலக அளவிலும் சரி, இந்திய அளவிலும் சரி, தமிழக அரசியலிலும் சரி; கொள்கை, குறிக்கோள், செயல்திட்டம், தத்துவம், சித்தாந்தம், இலக்கியச் சான்று, வரலாற்று ஊன்று ... முதலியவைகளையெல்லாம் எடுத்து விளக்கிச் செயல்படுகிறோம். நாம் 40, 50 நூல்களுக்கும் மேலே வெளியிட்டும் கூட நம்மைப் பற்றிய முழுமையான அறிவிப்பினை பொதுமக்கள் இன்னும் பெறவில்லை. எனவே, நமது சொற்பொழிவுகள்-தான் நம்மை நன்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்பதைப் புரிந்து செயல்பட வேண்டும் நாம். மேலும் இளைஞர் சமுதாயத்திடையே நமது சமய சமுதாய உணர்ச்சிகளை கிளர்ச்சிமிகு வளர்ச்சி பெறச் செய்ய இது போன்ற கல்வி நிலையச் சொற்பொழிவுகள்தான் மிகுந்த பயன் நல்கிடும்! நல்கிடும்! நல்கிடும்!

எனவே, அருள்மிகு கொடும்பாளூர் திரிசடையுடையான் சன்னிதானம் இராசாபாதர் அவர்களும்; அறக்கட்டளைத் தம்பிரான் ஓவிய ஆசிரியர் முனிரத்தினம் அவர்களும்; அருள்மிகு பிறம்ம இராக்கதர் சன்னிதானம் தேவராசுலு அவர்களும்; அருள்மிகு வேம்புலியம்மன் சன்னிதானம் செயராமன் அவர்களும்; அருள்மிகு ஆனைக்குளத்து அம்மன் சன்னிதானம் இராசவேலு அவர்களும்; அருள்மிகு ஞானக்காட்சிச் செல்வர் சித்தரடியார் இராமலிங்கம் அவர்களும்; குருதேவரிடம் நேரில் கூறியது போல்; தங்கள் தங்களால் இயன்ற அளவு பெரிய பெரிய முயற்சிகளைச் செய்து சிறப்பான விளம்பரங்களைச் செய்யுமாறு அருளாணை வழங்கப்படுகிறது. அனைவரும் ஒற்றுமையோடும், பற்றோடும், பாசத்தோடும், ஒருமைப்பாட்டு உணர்வோடும்தான் செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்! செயல்பட வேண்டும்!

**குறிப்பு**:- வெள்ளிக்கிழமை இரவு சந்திர கிரகணம் இருப்பதால்; அது பற்றிய சிறப்புப் பூசையை ஊருக்குள் ஏதேனும் ஓர் கோயிலில் செய்யலாம். அல்லது ஆர்வமுள்ளவர்களைப் பயணியர் விடுதிக்கு அழைத்து அவரவர் இல்லத்தில் எப்படிப் பூசை செய்யலாம் என்பதை விளக்கிடலாம். இதற்காகக் காயந்திரி மந்தரம், காயந்திரி மந்திரம், அருட்சினை மந்திறம், நாகப்பாதிப்பு மந்தரம் எனும் நான்கையும் அச்சிட்டுப் பொதுமக்களுக்கு வழங்கி சந்திர கிரகணம் பிடிக்கும் போது கையில் தர்ப்பைப் புல்லுடன் ஒரு பாத்திரத்தில் உள்ள தண்ணீருக்குள் கையை வைத்தபடி மேற்படி மந்திரங்களை ஓதினால் நல்லது என்று அறிவிப்பு வழங்குங்கள்.

இதற்காக, இந்துமதப் பற்றுளர்கள், ஆதிபராசத்தி குழுவினர், மற்ற இந்துமதக் கட்சியினர், ஊர்ப்பெரியவர்கள், ... முதலியவர்களிடம் நன்கொடை பெற்றுச் செயல்பட முற்படுங்கள். நமது தெய்வீகத் திருப்பணியில் பலரும் பங்கு பெற வாய்ப்பு தருவதற்காகத்தான் நன்கொடை திரட்டுகிறோம் நாம். இதனால் எவ்வளவு சிறிய தொகை தரப்பட்டாலும் அதனை மகிழ்ச்சியோடு பெற்று இந்த அறிவுப்பணியில், அருட்பணியில் அனைவரையும் பங்கு பெறச் செய்யுங்கள்.

4) சனிக்கிழமைப் பருவ பூசை மாலையில் 5.00 மணியிலிருந்து துவக்கப்பட்டு முன்னிரவு 9.00 மணிக்குள் பூசையை நிறைவு செய்ய முற்படுங்கள். காலதாமதம் கூடாது! பலரும் இப்பருவ பூசையில் பங்குபெற்று பருவப் பூசைப்பயன் அடைவதற்காக இயக்கத்தில் சேர்ந்து மாதாமாதம் ரூ.3.00 செலுத்தி பருவ பூசைக்காக நிலையான உறுப்பினர்களை மிகுதியாகச் சேர்த்திடுங்கள். இதேபோல், ஞாயிற்றுக்கிழமைப் பூசையையும், வார யாகத்தையும் மதியம் 12.00 அல்லது 1.00 மணிக்குள் முடித்து விடுவதற்குரிய வண்ணம் முன்னேற்பாடுகளைச் செய்யுங்கள். மேற்படி இரண்டு பூசைகளிலும் பொதுமக்களுக்கு அருளூறு பூசனைப் பொருளாக வழங்குவதற்கு

சுண்டலும், வெண்பொங்கலும் தயாரிக்கப் பணமாகவோ, பொருளாகவோ வசூல் செய்யுங்கள். இதற்காக அச்ச கூச்ச மாச்சரியமின்றி கடைவீதியில் உண்டியல் குலுக்குங்கள். கொடியை ஏற்றிக் கொண்டு தெருத்தெருவாக வீடு வீடாக வசூல் செய்ய முற்படுங்கள். உடன் பதில். இதுபோல் எல்லா வட்டாரமும் செயல்பட குருதேவர் ஆணையிடுகிறார்.

**குருவாணை.**

**அன்பு**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்,**
**12/10/86.**

**நகல் நல்குபவர்**:-

அருள்மிகு பசிய இளந்தலைகளை அணிந்த கபாலீசுவரி சன்னிதானம், சித்தர் மகன், சித்தரடியான் சீ.மோகன், புவனேசுவர், 12/10/86.

**//உண்மை நகல்//**
**//இதன் மூலநகல்: சித்தரடியார் திரு சீ.மோகன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# நாள்கோள்மீன் பாதிப்பைத் தடுக்க முடியுமா?

24/10/86,

தலைமைப்பீடம்.

அருள்மிகு மரப்பறை அங்காளபரமேசுவரி சன்னிதானம் சித்தரடியான் இர.கங்காதர குமார் அவர்கள் சமூகத்திற்கு அருள்மிகு பச்சைமலை வீரப்பட பத்திரகாளி சன்னிதானம் சித்தரடியான் இரா.சீனிவாசன் வரையும் மடல்.

1) யாவும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே. அம்மையப்பன் அருளே.

2) பேரன்புமிக்க நண்ப! தங்களின் 22-10-86 தேதியிட்ட அஞ்சல் நேற்று 23.10.86 கிடைக்கப் பெற்றோம். மிக்க மகிழ்ச்சி!

3) தாங்களும் தங்களின் தாய்தந்தையரும், திரு இராசமாணிக்கம் அவர்களும் வேலூர் பயணத்தில் கலந்து கொண்டது குறித்து மிக்க மகிழ்ச்சி. இராசிபுரம் வட்டாரம் வெகுவிரைவில் தயாராகி விடும் என்பதில் சிறு ஐயமும் இல்லை.

4) மேலும் தாங்களும் மற்றவர்களும் குருதேவரிடம் தற்போது இராசிபுரத்தில் அ.வி.தி. யாகசாலை அமைக்க வேண்டாம். ஆட்கள் சேர்ந்தவுடன் அமைத்துக் கொள்ளலாம் என்று கூறியதாக அறிந்தேன். தங்களின் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால், ஆட்கள் சேர்ந்தபின் அ.வி.தி. யாகசாலை அமைத்துக் கொள்ளலாம் என்பது ‘கடலலை ஓயட்டும்; பின் கடலில் குளிக்கலாம்’ என்பது போல் உள்ளது. மேலும் மக்களுக்கு நம்மை அறிமுகம், புரிமுகம்

செய்து வைப்பது அ.வி.தி.தான். எனவே, இப்போது இராசிபுரத்தில் இருப்பவர்களை வைத்து இராசமாணிக்கம், அவர் நண்பர்கள் முதலியோரை வைத்து அ.வி.தி. நிலையத்தை உருவாக்குங்கள். வேம்படிதாளத்தைச் சார்ந்த அனைவரும் தங்களுக்கு தோளோடு தோளாக நின்று உதவி செய்வார்கள். எனவே இதற்கு முயற்சி செய்க. திரு இராசமாணிக்கத்திடம் எடுத்துக் கூறுக. புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக!

5) தங்களின் கடிதத்தில்

அ) ***கிரகங்கள், மீன், இராசிகள் அடியான் அடியார்கள் இவர்களைப் பாதிக்காதா?***

ஆ) ***அப்படியெனில் உடல்நிலை கெடுதல், குடும்பத்திலிருந்து பிரிதல் போன்றவை எல்லாம் எதனால்? என்று கேட்டிருந்தீர்கள்.***

தங்களுடைய முதல் கேள்வி தவறு. அடியான், அடியார்களைப் பாதிக்காது என்று தங்களுக்குக் கூறியவர்கள் எல்லா அடியான், அடியார்களையும் பாதிக்காது என்ற பொருளிலேயே கூறியுள்ளார்கள். ஏனெனில், குருவினை முறையாகவும், முழுமையாகவும் புரிந்து விரும்பி நம்பி ஏற்றுப் போற்றிச் செயல்பட்டு குரு வேறு, தான் வேறு என்றில்லாமல் குருவோடு இரண்டறக் கலந்தவர்களை மட்டும்தான் பாதிக்காது. இந்நிலையில் எத்தனை பேர்கள் நம்மவர்கள் இருக்கிறார்கள்? ஒருவர் கூட இல்லை, இல்லை, இல்லை. எனவே, நாள் கோள் மீன் அடியான், அடியார்களைப் பாதிக்காது என்பது தவறானது.

6) ***பின் திங்கள், ஞாயிறு, செவ்வாய், சனி காயந்திரி மந்திரங்கள் எதற்கு? என்ற கேள்வி வரலாம்.***

**<u>இதற்குப் பதில்:</u>** அவை முழுமையாக நாள் கோள் மீன் பாதிப்பைத் தடுத்து விடாது. அதிகமாக இருப்பதைக் குறைக்கத்தான் செய்யும். அதாவது, ‘தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று’

என்ற அளவில்தான் நம்மைப் பாதுகாக்கும். (ஏனெனில் ஊழ்வினை, முற்பிறப்பு, விதி போன்றவற்றை நாம் ஒப்புக் கொள்கிறோம். எனவே, அதற்கேற்பவே பாதிப்புக்களின் அளவு அதிகமாகவோ, குறைவாகவோ இருக்கும்.)

7) மேற்கூறிய பதிலிலேயே உடல்நலமின்மை, தாய்தந்தையரைப் பிரிதல் போன்றவற்றிற்கு பதில் உள்ளன. எனவே, அதிகம் குழம்ப வேண்டாம். மற்றவரையும் குழப்ப வேண்டாம். ஆரம்பத்தில் இதுபோன்ற ஊசலாட்டங்கள் இருக்கத்தான் செய்யும். அதை வெற்றி கொண்டவனே உண்மையான அடியான்.

**இரா.சீனிவாசன்,**

**24/10/86.**

To

அருள்மிகு சித்தரடியான் இர.கங்காதர குமார் அவர்கள்,
17, கவரைத் தெரு, இராசிபுரம் (P.O.), சேலம் Dt. 637408.

From

R.Seenivasan,
C/O Gnaalakuru Siddhar Arasayogi Karuwooraar,
ESI Dispensary, Sembium, Madras-11.

**//உண்மை நகல்//**

**// இதன் மூல நகல்: சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் உள்நாட்டஞ்சலில் இருந்தது. //**

# அருளாதிசங்கராச்சாரியார் பீடநிலை ஓர் அறிவிப்பு

பேரார்வத்துக்கும் நெடிய கடிய உழைப்பிற்கும் உரியவராக விளங்கும் அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம், M.C.இராமன் அவர்கள் சமூகத்திற்கு தலைவர், குருதேவர், ஞானாச்சாரியார், அருளாட்சி நாயகம், ஞாலகுரு சித்தர் கருவூரார் விடுக்கும் ஓர் அறிவிப்பு மடல்.

1) அனைத்தும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் செயலே! அம்மையப்பன் துணையே! என்றாலும், அறிவு விழித்த நிலையில் அச்ச கூச்ச இச்சை மாச்சரியங்களைக் கடந்து அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபட உள்ளவராக உள்ளோம் யாம். எனவேதான், கண்டிப்புக் குருவாணைகளுக்குப் பதிலாக, திருத்த எச்சரிக்கை மடல்களுக்குப் பதிலாக, நேரடியாக அறிவிப்பு மடல்களை மட்டும் அனுப்பும் நிலையில் உள்ளோம் யாம். எனவே, அன்பு கூர்ந்து அவரவர் தங்களால் இயன்ற அளவு இரவுபகலாக கொள்கை விளக்கங்களையும், குறிக்கோள் நோக்கங்களையும் விரிந்தும், விரைந்தும் பொதுமக்களுக்கு வழங்கிச் செயல்படக் கூடிய புதிய செயல்திட்டத்தை உருவாக்கியுள்ளோம் யாம். இதன்படி நமது இயக்கத்தில் தங்களுக்கு ஓய்வு வேண்டும் என்று கருதுபவர்களுக்கும், அவர்களின் விருப்பங்களுக்கேற்ப முழுமையான ஓய்வு தரும் திருவுள ஒப்புதல் பெற்ற ஆணை வழங்கப்படுகிறது.

அதாவது நம்மவர்களில் யாரும் கோபுரத்தைத் தாங்கள்தான் தாங்குவதாக எண்ணும் பதுமைகள் போல எண்ணிக் கொண்டிருக்கக் கூடாது, கூடாது, கூடாது, கூடவே கூடாது. மேலும், நமது இயக்கம் எந்த ஒரு தனிமனிதனையும் நம்பியிருக்கின்ற ஒன்றல்ல

என்ற பேருண்மை முதலில் நமது இயக்கத்தவர் அனைவருக்கும் புரிய வைக்கப்பட வேண்டிய உண்மையாகும்.

அண்டபேரண்டம் முழுவதும் வாழுகின்ற அல்லது இயங்குகின்ற சித்தர்நெறியெனும் பெரிய அமைப்பிற்கு ஆங்காங்கே சிறுசிறு தேக்கங்களும், பழுதுகளும் ஏற்படத்தான் செய்யும். இதனைச் சரி செய்வதற்காகத்தான் பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், பல்வேறு யுகப் பதினெண்சித்தர்களும், (48) நாற்பத்தெட்டு வகைச் சித்தர்களும், இவர்களால் உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான ஆச்சாரியார்களும், கலைஞர்களும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். இதனை நம்மவர்கள் கட்டாயமாகப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டே ஆகவேண்டும்.

2) பதினெண்சித்தர் நெறிப்படி ஒவ்வொருவரும் இல்லறமேற்று உறவுநிலையில் வாழ்ந்து கொண்டுதான் அருட்பணியில் ஈடுபட வேண்டும். ஆனால், பேரார்வமுள்ளவர்கள் குறிப்பிட்ட காலம் குடும்ப உறவுகளை மறந்தோ அல்லது துறந்தோ காவிரியின் புதுவெள்ளம் போல் செயல்படலாம். இது அவரவரின் ஊழ்வினைப் படியும், குருபத்தியின் படியும், சித்தி முத்தியின் படியும் நிகழுவதாகும். எனவே, யாரும் தங்கள் தங்களின் முழு முயற்சியால்தான் தாங்கள் செயல்படுவதாக எண்ணி அகம்பாவமோ, ஆணவமோ, குருவாணை மறப்போ, துறப்போ செய்து தான்தோன்றித்தனமாகச் செயல்படக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

நம்மவர்களில் ஒரு சிலர் சாதியாலோ, பதவியாலோ, குருவால் கிடைத்த அருட்சித்தியாலோ, சிறுசிறு வட்டாரங்களுக்குள் மிகப்பெரிய செல்வாக்குகளைப் பெற்று விடுகிறார்கள். அந்த செல்வாக்கையே தங்களுடைய அரிய பெரிய சாதனையாக எண்ணி, அந்தக் குறுகிய வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்து விடுகிறார்கள். ஆனால், அந்தக் குறுகிய வட்டாரத்தைக் கூட முழுமையாக இயக்க உறுப்பினர்களாகவோ, குருதேவர் அறிக்கையின் சந்தாதாரர்களாகவோ, அ.வி.தி. நிலையங்களோடு தொடர்புடையவர்களாகவோ, குருவிடம் நேரடிப் பயிற்சி பெற்று அருளாளர்களாக மாறுபவர்களாகவோ

உருவாக்குவதில்லை! உருவாக்குவதில்லை! உருவாக்குவதில்லை! எனவே, இந்த தான்தோன்றிப் போக்குகளும், பூனை கண்ணை மூடிக்கொண்டு பால்குடிப்பது போன்ற போக்கும், கோழிக்குஞ்சு மனம் படைத்த கோழைப் போக்கும், அறியாமை நிறைந்த கண்மூடிப் போக்கும் தடுக்கப்பட வேண்டும் அல்லது அகற்றப்பட வேண்டும். <u>*ஆனால் திருத்தப்பட முடியாது, முடியாது, முடியாது, முடியவே முடியாது*</u>.

எனவே, யார் மனதையும் புண்படுத்தாமல் குருவாணைப்படி செயல்படாதவர்களை எல்லாம் அப்படியே விட்டுவிட்டு ஆர்வமுள்ளவர்கள் மட்டும் <u>கட்டாயமாக வியாழக்கிழமையில் பகலிலோ, இரவிலோ குருவருளைப் பெறுவதற்காக ஒன்றுகூடி காயந்திரி மந்தரம், மந்திரம், அருட்சினை மந்திறம் ஓய்விற்கும் வாய்ப்பு வசதிக்கும் ஏற்ப 48, 64, 96, 108 முறைகள் ஓதி முன்னும் பின்னும் சிவபுராணத்தை ஒருமுறை ஓதிடுங்கள். பிறகு தவக்கோலத்தில் சிறிது நேரம் அமருவீர்களேயானால்; தாத்தா இறுதியும், தாத்தா இயந்திர மனிதரும், தாத்தா கபாடபுரத்துக் கருவூராரும், தாத்தா தாமிரபரணியாற்றங்கரைக் கருவூராரும் ஆகிய நால்வரும் விண்ணையும் மண்ணையும் இணைக்கும் அருட்சத்திகளையும் வழங்குவார்கள்.</u> ஏனெனில், பாரதப் போர் அறிவிக்கப்பட்டுவிட்டது. **நமது அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் வியாழன் தோறும் செய்யும் குருபூசையின் மூலம் அருட்சத்திகளையும், சித்திகளையும் பெறுவதற்குரிய <u>புதிய வாய்ப்பு வசதிகள்</u> வழங்கப்பட்டுள்ளன**. இதனைப் புரிந்தும் புரியவைத்தும் அனைவரும் செயல்பட வேண்டும்.

**<u>குறிப்பு</u>**:- மேற்படி தவபூசைக்குப் பிறகு பழைய புதிய செயல்திட்டங்களைப் பற்றியோ, அல்லது நாம் அச்சிட்டு வழங்கியுள்ள நூல்களின் அடிப்படையிலோ கருத்து விளக்க விவாதங்கள் நிகழ்த்த வேண்டும். அதாவது, நாமனைவரும் தெளிவான தத்துவ வாதிகளாக இருந்தால்தான் நமக்கிடையில் பற்றும், பாசமும், தோழமையும், நட்பும், ஒற்றுமையும், ஒருமைப்பாடும், கட்டுப்பாடும், விட்டுக்

கொடுக்கும் போக்கும், அனைவரையும் அரவணைத்துச் செயல்படும் பண்பும் விளைந்திடும், விளைந்திடும், விளைந்திடும்.

3) நம்மவர்கள் கொள்கைத் தெளிவு முழுமையாகப் பெற்றிட்டால்தான் நமக்கு முறையான, நிறைவான வளர்ச்சி இருக்கும். இதற்காகவே நமது நிறுவன நிருவாகக் குழுவினர் மிகப்பெரிய முயற்சிகளைச் செய்து தத்துவ வகுப்புகள் நடத்தத் தயாராகி இருக்கிறார்கள். ஆனால் அவர்களை வரவழைத்துப் பாடம் கேட்டுக் கொள்கிற அளவுக்கு நம்மவர்கள் பொறுப்பாகவும், பொறுமையாகவும் செயல்பட எதையும் கற்றுக் கொள்ளவில்லை. இது வருந்தத் தக்கது. திருந்தத் தக்கது.

எனவேதான், எமது சுற்றுப்பயணங்களில் அனாதி சங்கராச்சாரியார் பீடாதிபதி இளந்துறவி சுந்தரானந்தா அவர்களை தத்துவ விளக்கப் பணிக்காக அழைத்து வருகிறோம். அவரிடம் மூன்று நான்கு தொகுதிகளாகவாவது குருதேவர் அறிக்கைப் புத்தகங்கள் இருக்கும். அவரும் ஏறத்தாழ விரிவான ஏட்டறிவையும், பட்டறிவையும் பெற்றுத் தயாராகியுள்ளார். எமக்கு அணுக்கத் தொண்டு புரிந்து அருளுலகத்தவர்களின் அறிமுகத்தையும் பெருமளவு பெற்றிருக்கிறார். எனவே, அவர் அருள் வழங்கவும், அருளுரை வழங்கவும் குருவாணை பெற்றுள்ளார்.

யாமும் பொறுப்பாளரும் மட்டுமே ஆங்காங்கே தங்கி மிகமிக இன்றியமையாத சத்தி சித்திப் பூசைகளைச் செய்ய வேண்டும். எனவே, நாங்களிருவரும் தனித்துத் தங்குவதற்குக் கட்டாயமாக வசதி வாய்ப்புகள் தேவை. இதேபோல் நம்மவர்களும், நமது ஆதரவாளர்களும், புதிய விருப்பாளர்களும் அருளைப் பெறவும், அருளுரையைப் பெறவும், தத்துவ விளக்கங்கள் பற்றிய விவாதங்கள் செய்து கொள்ளவும் அனாதிசங்கராச்சாரியார் பீடாதிபதி சென்னையில் இருந்து வரும் நம்மவர்களோடு தங்கிச் செயல்பட; முன்பு ஏற்பாடு செய்தது போல், இரயில்வே காலனியில் ஒரு வீடு ஏற்பாடு செய்யவும்.

13.11.86 வியாழக்கிழமை மாலேயே அங்கு வந்து விடுவோம் என்பதால் வியாழன், வெள்ளி, சனி மூன்று நாட்களுக்கும் கட்டாயமாக ஒரு வீடு எடுத்து விடுங்கள். அங்குதான் வந்து சந்திக்க வேண்டும். இதேபோல் அனேவருக்கும் சாப்பாடு அந்த வீட்டிற்குத்தான் கொடுத்து விடப்பட வேண்டும். சாப்பாடு காரணமாகவோ, பூசை காரணமாகவோ அல்லது வேறெந்தக் காரணமாகவோ யாராக இருந்தாலும் யாம் தங்குகின்ற தங்களின் வீட்டிற்கோ, செகதீசன் வீட்டிற்கோ வரக்கூடாது. **குருவாணே**.

யாம், அனேவரோடும் நேராகத் தாங்கள் வாடகைக்கு எடுக்கும் வீட்டில் வந்து தங்கிச் சாப்பாட்டை அங்கேயே முடித்துக் கொண்டு பொறுப்பாளருடன் தங்களுடைய வீட்டிற்கு வருகிறேம். இதுபோலத்தான் செகதீசன் வீட்டிற்கும், வேறுயாரும் எம்மோடு வரமாட்டார்கள். எமது அனுமதியில்லாமல் வேறு எந்த ஏற்பாட்டையும் செய்ய வேண்டாம். வசதிவாய்ப்பு இல்லாவிட்டால் மீனுட்சியம்மன் ஆலயத்திற்குக் கூடச் செல்லத் தேவையில்லே. நம்மவர்களேத் தாங்கள் வாடகைக்கு இருக்கக்கூடிய வீட்டில்தான் சந்திக்க விரும்புகிறேம். அனேவரிடமும் நன்கொடை பெற்றே பொதுவில் செலவு செய்யவும். **குருவாணே**.

உடன் பதில்.

**அன்பு**
**குவலய குருபீடம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரர்.**

**<u>நகல் நல்குபவர்:</u>**
சித்தரடியான் பி.கோபாலகிருட்டிணன், ஒட்டன்சத்திரம், பழனி வட்டம், அண்ணு மாவட்டம்.

**//உண்மை நகல்//**
**// இதன் மூல நகல்: கையெழுத்துப் பிறதியாக இருந்தது. //**

# குருதேவரே ஆயுதமேந்திப் போரில் ஈடுபடுதல்

“அண்டபேரண்டமாளும் தாத்தாக்கள் ஆத்தாக்கள் அம்மையப்பன்கள் சமூகத்திற்கு அருளாட்சி நாயகம், அரசயோகி, இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், குருதேவர், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குவலய குருபீடம், அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் கருவூரார் விடுத்துக் கொள்ளும் வேண்டுகோள் விண்ணப்ப மனு.

எமது அருட்சேனைத் தளபதியும், அசுவத்தாமனின் மறுதிருத்தோற்றமுமான கு.இரவிமணிக்கு பச்சைமலை தருமபுரி வட்டார பாப்பாரப்பட்டி கிராமத்து மந்திறவாதிகள் செய்த பாதிப்பால் விளைந்த உடல்வீக்கத்தை தடுத்துப் பரிகாரம் செய்த காரணத்தினால்; எமக்கும், குருகுலப் பாதுகாவலர் வீரமாகாளி சன்னிதானமாகிய நெ.சேவுகனுக்கும், திருகுலப் பாதுகாவலர் திரிபுரமெரித்த அவிர்சடைக் கடவுள் சன்னிதானமாகிய பெ.சுப்பையா அவர்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்பட்டு விட்டன. நாட்கள் பல ஆகிவிட்டன. நலம் தெரியவில்லை.

எனவே, உடனடியாகப் பாதிப்பினைச் செய்துள்ள மந்திரவாதியையும், இதில் பங்கு பெற்றுள்ள அனைவரையும் தக்க எச்சரிக்கையும், கண்டிப்பும், தேவையான அளவு தண்டிப்பும் வழங்கி எங்களைக் காக்குமாறு மீண்டும் மீண்டும் வேண்டிக் கொள்கிறோம். அருளாட்சி நாயகம் என்ற முறையில் சென்னை செங்குன்றம் சூரப்பட்டு இலட்சுமிபுரம், தற்காப்புத் தானியங்கி யாகசாலையில் எங்களுக்குத் தேவையான பாதுகாப்பிற்காக நெருப்பு வளர்த்து எரிமூட்டி இந்த ஆணையை அறிவிக்கின்றோம். இந்த நொடி முதல் இது செயலுக்கு

வருகிறது. பொறுமையிழந்து இந்த ஆணையை விடுப்பதால் உடனடியாகக் கண்டிப்பும், தண்டிப்பும் நிறைவேறட்டும். இதில் ஈவு இரக்கமில்லை. இதுவே கருவாணை, குருவாணை, தருவாணை, திருவாணை.”

பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அமுத ஆண்டு ஐப்பசித் திங்கள் 27ஆம் நாள் (13-11-86) வியாழக்கிழமை குருநாள் அன்று மாலை சுமார் 5.00 மணியளவில் எழுதி இரவு 7.00 மணியளவில் சென்னை செங்குன்றம் சூரப்பட்டு தற்காப்புத் தானியங்கி யாகசாலையில் மேற்கண்ட ஆணையை அறிவித்ததிலிருந்து உடல்நிலை தேறி வருகிறார். காலில் வீக்கம் இல்லை. வலியும் இல்லை. 13-11-1986 வியாழன் மாலை 5.00 மணியிலிருந்து குருதேவர் தன்னையறியாமல் அருளாட்சி அமைப்புப் பணிக்காக நேரடிப் போரில் ஆயுதம் ஏந்திப் போரிட ஆரம்பித்து விட்டார். எனவே, நம்மவர்கள் அனைவரும் தினமும் 11 - 1:30 பூசையில் 108 முறை காயந்திரி மந்தரம், மந்திரம், 48 முறை அருட்சினை மந்திறம், 1 முறை சிவபுராணம் பாடிப் பூசைசெய்து அருட்போரில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளும் தகுதியையும், திறமையையும் பெற்றுக் கொள்ளும்படி வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில், குருதேவர் தமது 51வது வயதில்தான் நேரடியாகத் தானே ஆயுதம் ஏந்தி மந்திரவாதிகளைத் தண்டிக்கப் புறப்பட்டுள்ளார். எனவே, நம்மவர்கள் இதைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

**[தலைமைப்பீடப் பணியாளர்]**

<u>நகல் நல்குபவர்:</u>

ஆதரவாளர் K.நாராயணன்.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது.//**

# தமிழர்களின் உலகளாவிய முதன்மை

1. தமிழர்களால்தான் இந்த உலகில் நிலையான ஒற்றுமையையும், அமைதியையும், நிம்மதியையும், சமாதானத்தையும் உருவாக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன.

2. தமிழர்கள்தான் உலக சமத்துவ சகோதரத் தத்துவ பொதுவுடமை கூட்டுறவு சமுதாயத்தை உருவாக்க முடியும் என்ற பேருண்மைக்குரிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன.

3. தமிழர்களால்தான் உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன.

4. தமிழர்களால்தான் உலக மக்களுக்கு இடையில் உள்ள அகம்பாவ வெறி, ஆணவ வெறி, தன்னல வெறி, பதவி வெறி, பண வெறி, ஆதிக்க வெறி, ஆக்கிரமிப்பு வெறி, அதிகார வெறி, இன வெறி, மொழி வெறி, நாட்டு வெறி, மத வெறி முதலிய வெறிகள் அனைத்தையும் மட்டுப்படுத்த, கட்டுப்படுத்த, நெறிப்படுத்த முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன.

5. தமிழர்களின் ஒற்றுமைச்சிதைவும், சீரழிவும், சீர்குலைவும், சிறுமையும், வறுமையும், வீழ்ச்சியும், தாழ்ச்சியும், இகழ்ச்சியும்தான் உலக ஒற்றுமையின் சிதைவிற்கும், சீரழிவுக்கும், சீர்குலைவுக்கும், சிறுமைக்கும், வறுமைக்கும், வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும், இகழ்ச்சிக்கும் காரணமாக இருக்க முடியும் என்ற பேருண்மை பற்றிய விளக்கங்கள் இந்து வேதத்திலும், இந்து மதத்திலும்தான் இருக்கின்றன...

**//“அருட்போர்” என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை.//**

***“இந்துக்கள் கோயில்களில், பூசைகளில் சமசுக்கிருதத்தைப் பயன்படுத்துவது பெரிய பாவம், கொடிய தீட்டு, நெடிய சாபம்.”***



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** (கி.பி.785 - 1040) ஏறத்தாழ இருநூற்று ஐம்பத்தாறு ஆண்டுகள் (256) வாழ்ந்திட்டார். இவருடைய போதனைகளில் சில:

*“பதினெண்சித்தர்களின் அருளார்ந்த அறிவுக் கொடையே இந்து மதம்!”*

*“இந்து மத மறுமலர்ச்சியே தமிழின மொழி நாட்டு மறுமலர்ச்சி!”* ... ... ...

இவருக்கு அடுத்து சுமார் 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப்படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப்படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் தாள் நைந்து, எழுத்து மங்கி, அழிந்து கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாகவே வழங்கப்படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajapuram, East Tambaram. Cell: 09972130609 at Sri Vignesh Printers, Madurai.

**https://newsletters.gurudevar.org** **https://gurudevar.org**
**https://induism.org** **https://books.gurudevar.org**
***Email:*** **indhuism@gmail.com**